இயேசு கிறிஸ்துவே, என் உள்ளத்தைப் பார்ப்பவர் நீர்; என்னுடைய ஆசைகளை அறிந்தவர் நீர்; என்னுடைய எல்லாவற்றையும் நீர் ஒருவரே, சொந்தமாக்கிக் கொள்ளும்.

– புனித அகாதா

நாம் உள்ளுக்குள்ளே எதிர்கொள்ளும் போராட்டங்களை இயேசு புரிந்துகொள்கிறார். மேலும் விண்ணகத் தந்தையின் அன்பை எளிமையாக வெளிப்படுத்துவதன் மூலம் நமக்கு மறுமொழி அளிக்கிறார். அதாவது, கடவுளின் சட்டங்களுக்கு உட்பட்டு, எவ்வாறு அன்பில் வாழ்வது என்று நமக்குக் காட்டுகின்றார். எடுத்துக்காட்டாக, நம்முடைய பலவீனங்கள் அல்லது திருச்சபையோடு / ஒருவருக்கொருவரிடையே இருக்கும் வருத்தங்கள், நேர்மை, ஒருவருக்கொருவர் காட்டும் அன்பு, தாழ்ச்சி, சுய விழிப்புணர்வு ஆகியவற்றில் வளர நமக்கு உதவுகிறார். இதற்காக நாம் செய்யும் முயற்சிகள் மிகவும் அற்பமானவை என்று தோன்றினாலும், நாம் ஆற்றல்மிக்க சாட்சிகளாக மாறுகிறோம்.

நம்முடைய வாழ்க்கைப் பயணத்தில் இந்தக் கட்டளைகளைக் கடைப்பிடிக்க நாம் போராடும்போது, நம்மை இயேசு அறிந்துள்ளார் என்பதை நமக்கு உறுதிப்படுத்துகின்றார். நம்முடைய பலவீனங்களையும், போராட்டங்களையும் அவர் அறிந்துள்ளார். நாம் அளிக்கும் வாக்குறுதிகளுக்கு ஏற்ப நாம் வாழ முயற்சிப்பதில் தோல்வியடைவதையும் அவர் அறிந்துள்ளார். நம்முடைய ஒவ்வொரு செபங்களிலும், ஏன் வார்த்தைகளில்லாமல், நாம்விடும் பெருமூச்சுகள், கூக்குரல் மற்றும் அழுகையிலும் அவர் நம்மோடு பிரசன்னமாக இருக்கிறார். உண்மையிலேயே இயேசு மிகவும் அன்பான மாபெரும் ஆறுதலளிப்பவர்.

நம்முடைய இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில், நம்முடைய அன்றாட போராட்டங்களில் இந்த உறுதியான ஆசீர்வாதங்கள் ஒளிவீசும் கலங்கரை விளக்காகத் திகழ்கின்றன. அவரின் வாக்குறுதிகளை நாம் பற்றிக்கொள்ளும்போது, நம்முடைய துன்பங்களுக்கு ஒரு அர்த்தம் கிடைக்கின்றது. சாத்தியமில்லாதது என்று நினைப்பது சாத்தியமாகின்றது. நம்முடைய உள்ளங்கள் துணிவு கொள்ளட்டும். ஏனென்றால் நம் வாழ்வில் நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியிலும் நம் கடவுள் நம்பகமானவராகவும், நேசிப்பவராகவும், உறுதியளிப்பவருமாகவும் இருக்கிறார்.

எப்போதும் அவரின் அன்பில் நிலைத்திருப்போம் ✝

**இன்றைய வாசகங்கள்:**

எசேக்கியேல்: 33: 7-9;

திருப்பா: 95: 1-2, 6-7, 8-9

உரோ: 13: 8-10

மத்:18: 15-20

**வாரம் ஒரு வசனம்**

உண்மையிலேயே இயேசு மிகவும் அன்பான மாபெரும் ஆறுதலளிப்பவர்

INTERNAL CIRCULATION ONLY
BUL 36/2020

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

6 செப்டம்பர் 2020

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் 23 ஆம் ஞாயிறு

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்

மாதாந்திர கருப்பொருள்:

உங்களுக்காகவும் பலருக்காகவும் இரத்தம் சிந்தப்பட்டது

## உண்மையான அன்பு அனைத்து சட்டங்களையும் நிறைவு செய்கிறது



இந்த வார வாசகங்களில் உண்மைகள் அடங்கிய சட்டத் தொகுப்பு ( சட்டங்கள்) நிறைந்துள்ளது. ஒவ்வொரு கட்டளைகளுக்கும் அன்புதான் மறுமொழி என்றும் அதற்கான வாய்ப்பை நாம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் புனித பவுல் நமக்கு நினைவூட்டுகின்றார். எனவே கட்டளைகள் நம் வாழ்வை வளமாக்கும் அமுதம் என்பதால் அவற்றை வாழ நாம் முயற்சிக்க வேண்டும். நம்மில் பலருக்கு இந்தக் கட்டளைகள் மனப்பாடமாகத் தெரியும். நம்முடைய வாயில் வார்த்தைகளாக எளிதாக வந்து விழுந்தாலும், பல வேளைகளில் அதைக் கடைப்பிடிப்பதில் சிரமத்தை எதிர்நோக்கியிருப்போம். எந்தவொரு ஆணோ, பெண்ணோ, அனைத்துக் கட்டளைகளையும் அவ்வளவு எளிதாக எல்லாக் காலகட்டத்திலும் எளிதாகக் கடைப்பிடிக்க முடியாது. ஆயினும் , கடவுளின் மக்களாக, முழுமையான மற்றும் புனிதம் நிறைந்த வாழ்க்கை வாழ நாம் பாடுபடுகிறோம்.